அ.வ.எண்:46 /2023 நாள்: 10.03.2026

வா.சா.1– தனிமலை

ராஜா

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**2,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது குடும்பத்தாரை ஊரிலிருந்து ஒதுக்கி வைத்து விட்டார்கள். கோவிலில் சாமி கும்பிட அனுமதிக்க மாட்டேன் என்கிறார்கள். அதனால் என்னையும் எனது குடும்பத்தாரையும் ஊருடன் சேர்த்து திருவிழாவில் சாமி கும்பிட வழிவகை செய்யுமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா கோவில் அமைந்துள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால், சர்வே எண்.164 ஆகும். தாவா கோவிலின் பெயர் ஸ்ரீ அழகியபொன்னாள் கோயில் ஆகும். மேற்படி கோவில் அமைந்துள்ள இடம் அரசு புறம்போக்கு இடம் என்றால் சரிதான். தாவா கோவில் எப்பொழுது யாரால் கட்டடப்பட்டது என்றால் பல தலைமுறைகளுக்கு முன்னால் சிறுகை கிராமத்து மக்களால் கட்டடப்பட்டது. எந்த வருடம் மேற்படி கோவில் கட்டடப்பட்டது என்பதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது சிறுகை கிராமத்தில் தான் வசித்து வருகிறேன், கோயம்புத்தூரில் வேலை பார்த்து வருகிறேன்.

2. சிறுகை கிராமத்தில் எனக்கு பாத்தியப்பட்ட நஞ்சை புஞ்சை நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலில் எப்பொழுது திருவிழா நடைபெறும் என்றால், ஒவ்வொரு மகா சிவராத்திரி அன்றும் திருவிழா நடைபெறும். தாவா கோவில் திருவிழாவின் போது வடமாடு மஞ்சுவிரட்டு நடத்துவது வழக்கம் தான் என்றால் சரிதான். எப்பொழுது அந்த மஞ்சுவிரட்டு நடைபெறும் என்றால் சிவராத்திரிக்கு அடுத்த நாள் நடைபெறும். பொதுவாக மேற்படி மஞ்சுவிரட்டு எங்கு நடைபெற்றது என்றால், எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் என்னுடைய அனுமதி இல்லாமல் நடைபெற்றது. எனது இடத்தில் எனது அனுமதி இல்லாமல் மேற்படி மஞ்சுவிரட்டு நடக்கக்கூடாது என்று நான் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால், சரியல்ல தெரிவித்துள்ளேன். நான் எப்பொழுது மேற்படி ஆட்சேபனையை தெரிவித்தேன் என்றால் 2022 ஆம் ஆண்டு தெரிவித்தேன். 2022 ஆம் ஆண்டிற்கு முன்பாக எத்தனை வருடங்களாக எனது இடத்தில் மஞ்சுவிரட்டு நடைபெற்றது என்றால் சுமார் இரண்டு வருடங்களாக எனது அனுமதி இல்லாமல் நடைபெற்றது.

3. மேற்படி வடமாடு மஞ்சுவிரட்டு பொதுமக்களால் அரசின் அனுமதி பெற்று தான் நடத்தப்படுகிறது என்றால் சரிதான். நான் எதற்காக ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால், மஞ்சுவிரட்டு நடக்கும் எனது இடத்தை எழுதிக் கொடுக்கும்படி 4 முதல் 9 பிரதிவாதிகள் கேட்டார்கள் நான் மறுத்துவிட்டேன். அதன் பின்பு மஞ்சுவிரட்டு நடத்த எனது கையெழுத்தை மோசடியாக ஏற்படுத்தி மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி

பெற சென்று விட்டார்கள். அது தெரிந்த பின்பு தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி எனது கையெழுத்தை மோசடியாக ஏற்படுத்திய தொடர்பாக காவல்துறையில் புகார் அளித்தேனா என்றால், புகார் அளித்துள்ளேன். மேற்படி புகாரின் நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாவா கோவில் சம்பந்தமாக எனது குடும்பத்தாரிடம் குடிவரி வசூல் செய்யவில்லை என்பதால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னிடம் குடி வரியும் வாங்கவில்லை எனது குடும்பத்தாரையும் ஒதுக்கி வைத்து விட்டார்கள், எனது குடும்பத்தை விவசாயம் செய்ய விட மாட்டேன் என்கிறார்கள், அதனால் வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

4. மேற்படி ஊர் மக்கள் எனது குடும்பத்தாருக்கு இளைத்த இடைஞ்சல் சம்பந்தமாக ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன், ஆனால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் 1 முதல் 3 பிரதிவாதிகளை பொறுத்து எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றும், வேண்டுமென்றே அரசு தரப்பினரை தொந்தரவு செய்ய வேண்டும் என்றும், இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்து உள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக அரசு தரப்பினர்கள் ஏதேனும் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை. தாவா வழக்கு வாதியாகிய எனக்கும் 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் இடையே தனிப்பட்ட வழக்கு என்று

சொன்னால் சரியல்ல. தாவா வழக்கை பொறுத்தமட்டில் நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத் தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**4 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் எத்தனை வருடங்களாக கோயம்புத்தூரில் இருந்து வருகிறேன் என்றால் சுமார் 25 வருடங்களாக இருந்து வருகிறேன். கோயம்புத்தூரில் எனக்கு சொந்தமாக வீடு உள்ளது என்றால் சரியல்ல, வாடகை வீட்டில் தான் உள்ளேன். 8ம் பிரதிவாதி பரமசிவம் தாவா கோவிலின் பூசாரி என்றால் சரிதான். நான் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் நிலையத்தில் கொடுத்த புகார்களில் 8 மற்றும் 9 பிரதிவாதிகள் சம்பந்தமாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, அவர்களைப் பற்றியும் புகார் கொடுத்துள்ளேன். நான் தாக்கல் செய்த புகார்கள் உண்மை தன்மை இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான், ஆனால் நான் மேல்முறையீடு மனுக்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த மேல் முறையீடுகளும் விசாரணைக்கு பிறகு நான் பொய்யாக புகார் கொடுத்தேன் என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் குடிவரி வசூல் செய்யும்படி பிரதிவாதிகளுக்கு வலியுறுத்தினர்.

2. நான் 2023 ஆம் ஆண்டிற்கான வரி செலுத்தினேன் என்றும், ஆனால் 2024 முதல் 2026 வகையான குடிவரியை என்னிடம் பிரதிவாதிகள் கேட்டபோது நான் கொடுக்க மறுத்து விட்டேன் என்று

சொன்னால் சரியல்ல. என்னிடம் 2023 ஆம் ஆண்டு வரியை வாங்க மறுத்துவிட்டனர். அதன் பின்பு நீதிமன்றத்தின் உத்தரவினை தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு குடிவரியை மட்டும் என்னிடம் பெற்றுக் கொண்டனர் அதன் பின்பு என்னிடம் குடிவரை வசூல் செய்யவில்லை. 2024 ஆம் ஆண்டிற்கான குடி வரியை என்னிடம் யார் வசூல் செய்தது என்றால் 4ம் பிரதிவாதி வசூல் செய்தார். 2025 மட்டும் 2026 ஆண்டுகளுக்கான குடி வரியை யார் வசூல் செய்தது என்ற விபரத்தை நான் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், எனக்கு வரி வசூல் செய்த விபரமே தெரியாது. குடிவரி வசூல் செய்த விபரமே தெரியாத போது நான் என்னிடம் குடிவரி வசூல் செய்யவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கோவில் சம்பந்தமாக கும்பாபிஷேகம் நடந்த பொழுது எவ்வளவு வரி வசூல் செய்தார்கள் என்றால், கும்பாபிஷேகம் நடந்தது என்னிடம் யாரும் சொல்லவில்லை அது பற்றி எனக்கு தெரியாது.

3. எனது கையெழுத்தை மோசடியாக ஏற்படுத்தியதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை, எனக்கு வாய்மொழியாக சொன்னார்கள் யார் சொன்னது என்றால் ஊரில் உள்ள நபர்கள் சொன்னார்கள், சொன்ன நபரின் பெயர் என்ன என்றால் மல்லிகா என்ற நபர் சொன்னார். மேற்படி மல்லிகா என்ற நபர் கோவில் கும்பாபிஷேகம் சம்பந்தமாகவும் அது தொடர்பாக வரி வசூல் செய்யப்பட்டது சம்பந்தமாகவும் என்னிடம் எதுவும் சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை. கடந்த

2 வருடங்களுக்கான குடிவரி மற்றும் கும்பாபிஷேகம் நடந்ததற்கான வரி ஆகியவற்றை கொடுத்தால் பிரதிவாதிகள் தற்பொழுதும் வாங்கிக்கொள்ள தயாராக உள்ளார்கள் என்றால், என்னிடம் அவர்கள் ஏற்கனவே வாங்கவில்லை அதற்காகத்தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா கோவிலில் எப்பொழுது வேண்டுமானாலும் சென்று தரிசனம் செய்து கொள்ளலாம் என்றும், அதற்கு எந்தவித தடையும் இல்லை என்றும், பிரதிவாதிகள் அதில் இடையூறு செய்ய மாட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது குழந்தைக்கு முடி எடுப்பதற்காக சென்ற பொழுது பூசாரி நான் கொண்டுவந்த அர்ச்சனையை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். நான் தாவா கோவில் சம்பந்தமாக நான் முதல் மரியாதை எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

4. வடமாடு மஞ்சுவிரட்டு எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நடக்கவில்லை என்றும் அது கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் நடைபெற்றது என்றும் சொன்னால் சரியல்ல. நான் கோயம்புத்தூரில் இருந்து வருவதால் கிராமத்து கோவில் சம்பந்தமாக என்னை அழைக்கும் பொழுது நான் கலந்து கொள்ளவில்லை என்றும், நான் ஊருக்கே சரிவர வந்து போவதில்லை என்றும் சொன்னால் சரியல்ல, நாளைக்கு கோவில் தொடர்பாக கூட்டம் நடைபெற்றால் எனக்கு அதற்கு முந்தைய நாள் இரவு 10 மணிக்கு தான் தகவல் சொல்வார்கள். எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் எனது மாமனார் தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் 4 முதல் 9 பிரதிவாதிகளின் மீது கொண்ட

முன்விரோதம் காரணமாக பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் குடிவரி செலுத்துவதையோ கோவிலில் தரிசனம் செய்வதையோ பிரதிவாதிகள் எப்பொழுதும் தடுத்ததில்லை என்றும் இனியும் தடுக்க மாட்டார்கள் என்றும், நான் வழக்கிற்காக அவர்கள் தடுப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. கோவில்வரி மற்றும் குடிவரி ஆகியவற்றை நான் எப்பொழுது கொடுத்தாலும் பிரதிவாதிகள் வாங்க தயாராக உள்ளனர் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.10 15:52:27 +0530